**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI**
**O.S. No. 249 /2022**

**Date: 12.03.2025**

**வா.சா. 1 ராணி, க/பெ.கண்ணன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

(1) தாவாவில் ஒரேயொரு அட்டவணை சொத்திற்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை அயிட்ட சொத்துக்களாக பிரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. தாவாவில் ஏ மற்றும் பி அட்டவணை சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி என் அண்ணன் செல்வதுரையின் மகன் என்றால் சரிதான். செல்வதுரைக்கு பிரதிவாதியை தவிர மேலும் இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். என் கணவர் பெயரில் உள்ள அதிகார பத்திரத்தில் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கணவர் பெயரில் உள்ள பவர் பத்திரம் என் அண்ணன் என் கணவரிடம் வாங்கிய கடனுக்கு பாதுகாப்புக்காக எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அண்ணனுக்கு இரண்டு சர்வே நெம்பர் 45 மற்றும் 46 ல் சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

(2) வீடு புல எண்கள் 45 மற்றும் 46 ல் உள்ளது என்றால் சரிதான். என் அண்ணன் என் கணவருக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் அதிகார பத்திரமான வா.சா.ஆ.2 ல் என்னென்ன சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. அதிகார பத்திரமான வா.சா.ஆ.2 ல் டி.எஸ்.நெம்பர் 45 ல் உள்ள இடம் இடம் பெற்றுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அண்ணன் டி.எஸ்.நெம்பர் 45 மற்றும் 46 ஆகிய இரண்டு சர்வே நெம்பர்களிலும் வீடு கட்டி அவரின் 3 பிள்ளைகளுக்கு கொடுத்து அந்த பிள்ளைகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் அங்கு தான் இருக்கிறார்கள். உண்மையிலேயே என் கணவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் அது டி.எஸ். 45 மற்றும் 46 ஆகிய இரண்டையும் சேர்த்து தான் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் இரண்டு டி.எஸ் நெம்பர்களையும் சேர்த்து தான் அதிகாரம்

கொடுக்கப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் வா.சா.ஆ.2ல் டி.எஸ் 46 சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. என் கணவரிடம் வாங்கிய ரூ. 4லட்சம் கடனுக்காக பெறப்பட்டது தான் வா.சா.ஆ.2 அதிகார பத்திரம் என்றால் சரியல்ல. மோசடியாக பொது அதிகாரம் பெற்று என்னுடைய மகன் மணிகண்டன் பெயரில் என் கணவர் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அதன்பின்னர் 2014ல் அந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு மோசடியாக என் பெயருக்கு கிரையப்பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

3) என் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் கண்ட சொத்து விவரத்தில் அந்த சொத்தின் நான்கு எல்லைகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், பொதுவில் 3/1 பிரிக்கப்படாத பாகம் என்று தான் உள்ளது என்றால் நடுப்பாகம் என்றுள்ளது. நான் சொல்வது போல் வா.சா.ஆ.3 ஆவணத்தில் நடுப்பாகம் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. கிரையப்பத்திரம் ஏற்பட்டபோது என் அண்ணனும் இருந்தார். அவர் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை. நான் என் அண்ணன் மற்றும் அவர் மகன்களுக்கு தெரியாமல் கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4ன் அடிப்படையில் புல தணிக்கை செய்து என்னிடம் விசாரணை செய்யப்பட்டதா என்றால் என்னிடம் எதுவும் கையொப்பம் பெறவில்லை. என் அண்ணனின் வீடு 3 தாக்காக அமைந்துள்ளது என்றும், வா.சா.ஆ.4ன் அடிப்படையில் நான் தவறான அடிப்படையில் விசாரணை எதுவும் செய்யாமல் என் பெயரில் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறான அடிப்படையில் இந்த தாவாவை பிரதிவாதிகள் மேல் தாக்கல் செய்து வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**